நான் ஒரு மடிக்கணினி. என் பெயர் ‘ஏசர்’. நான் மலாக்காவில் உள்ள ஒரு தொழிற்சாலையில் பிறந்தேன். என் நிறம் வெள்ளை.

ஒரு நாள், எங்களை ஒரு பெட்டியில் அடைத்தனர். என் மனம் 'பட பட' என துடித்தது. நாங்கள் நீண்ட நேரம் கனவுந்தில் பயணம் செய்தோம். இறுதியில், ஒரு கடையின் முன் கனவுந்து நின்றது. கடையின் ஊழியர் எங்களை எடுத்து கண்ணாடிப் பேழையில் அடுக்கினார். பிறகு எங்கள் மீது விலை அட்டையை ஒட்டினார்.

சில நாட்களுக்குப் பிறகு திரு.கவின் என்னை வாங்கினார். அவர் என்னைத் தினமும் பயன்படுத்துவார். அவர் தினமும் என்னைச் சுத்தமாக வைத்திருப்பார். அவரின் வேலைகளை என் வழியே செய்வார்.

ஒரு நாள், அவர் கை தவறியதால் நான் கீழே விழுந்து விட்டேன். அவர் மனம் வருந்தினார். அவர் என்னைக் கடைக்குக் கொண்டு சென்றார். கடைக்காரர் என்னைப் பழுதுபார்த்தார். நான் சரியானேன். இன்றுவரை ‘கண்ணை இமை காப்பது போல்’ அவர் என்னைக் காத்து வருகிறார்.

LIVEWORKSHEETS